<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>
<u>அசல் வழக்கு எண். 616 /2019</u>

**2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07–ம் நாள் திங்கள் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **செல்வி. S.இவாஞ்சலின், இளநிலை உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :ஜெய்புன்னிசா | தொழில் | : கூலி வேலை |
| கணவர் பெயர் | :காதர் பாட்சா | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :முகமது பட்டினம் | வயது | : 48 /2025 |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(i) இவ்வழக்கை எனது தந்தை தான் ஆரம்பத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வழக்கு விபரம் பற்றி எனது தந்தை என்னிடம் கூறியுள்ளார். தாவா சொத்து ஆதயில் ச.எண்.44/1ல் ஏக்கர் 1.02 செண்ட் என்றால் சரிதான். மேற்படி சொத்து எனது தாத்தா உலாமொய்தீன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தாத்தா உலாமொய்தீனுக்கு எத்தனை வாரிகள் என்றால்1. முகமது முஸ்தபா 2. எனது தந்தை காதர்பாட்ஷா, 3. பீர்முகமது மற்றும் ஒரு பெண் பிள்ளை பிறந்தார் அவர் இறந்துவிட்டார். பெயர் தெரியவில்லை. மேற்படி பெண் பிள்ளைக்கு வாரிசுகள் உள்ளார்கள். அவர்களது பெயர் 1. முஸ்தபா 2. பாத்திமா. ச.எண்.44/1ல் தான் எனது தந்தை காதர்பாட்ஷாவுக்கு 24 செண்ட் நிலமும், எனது பெரியப்பா முகமது முஸ்தபாவிற்கு 78 செண்ட் நிலமும் தானமாக பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் தனித்தனியே எழுதிகொடுத்திருந்தார் என்றால் சரிதான். தாவா புல எண் சொத்தில் பீர்முகமதுவிற்கு எந்த பங்கும் கொடுகப்படவில்லை, உரிமையும் இல்லை என்றால் சரிதான்.

(ii) தாவாவை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தந்தை காதர்பாட்ஷாவிற்கு எனது தாத்தா தானமாக எழுதிக் கொடுத்த 24 செண்ட் நிலத்தில் பிரதிவாதிகள் 11 செண்ட்டை ஆக்கிரமித்துவிட்டார்கள். ரோடு போட்டதற்கு பின்னிட்டு எதிரிகள் வசம் 6 செண்ட் உள்ளது. அதை எங்களுக்கு தரவேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது பெரியப்பா முகமது முஸ்தபாவிற்கு எழுதிக்கொடுத்த 78 செண்ட் நிலத்தை தான் பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதிகள் எந்த ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் அவர்கள் கிரையம் பெற்ற சொத்தை தான் அனுபவம் செய்து வருகிறார்கள்

என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.